72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 30 May 2024
நேரம் : 02:00 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# ஏப்ரல் 2024 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானத்தில் 39% ஆதரவுடன் சஜித் பிரேமதாச மற்றும் அ. கு. திஸாநாயக சமநிலையில்

## *ஏப்ரல் 2024 IHP MRP ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானங்கள் புதுபிப்பு*

IHP-ன் ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் பற்றிய இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) ஏப். 2024ற்கான தற்காலிக MRP மதிப்பீடுகள் என்.பி.பி./ஜே.வி.பி. தலைவர் அ. கு. திஸாநாயகவின் ஆதரவு 39%ற்கு (-6) விழுந்து எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவுடன் சமநிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. ஜனா.ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவு 13% (+3)ற்கு அதிகரித்ததுடன், யாராகிலும் ஒரு எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் 9% (+1) ஆதரவுடன் பின்தங்கியிருந்தார்.




இம்மதிப்பீடுகள் IHP SLOTS மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்ற்றாடிபிகேஷன் (Multilevel Regression and Poststratification) (MRP) மாதிரியை (01/2024ல் திருத்தப்பட்டது) அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டவை. இந்த புதுப்பிப்பு, வயதுவந்தவர் அனைவரையும் உள்ளடக்கும், மேலும் ஏப்ரல் 2024ல் நடத்தப்பட்ட 444 நேர்காணல்கள் உள்பட, அக். 2021 முதல் மே 19 2024 வரை நடத்தப்பட்ட 17,134 நேர்கானல்களின் தரவுகளை பயன்படுத்தி கணிக்கப்பட்டது. மாதிரியின் நிச்சயமற்ற தன்மையை கவனத்தில் எடுக்க 100 பூட்ஸ்ட்ராப்புகள் ஓட்டப்பட்டன. பூட்ஸ்ட்ராப்பிங் என்பது ஒரு புள்ளியியல் நுட்ப முறை. ஏப்ரல் மாதத்திற்கு பிழை விளிம்பு 1-4% என்று மதிப்பிடப்பட்டது.

"ஏப்ரல் மாத SLOTS கருத்துக்கணிப்பு புது வருட விடுமுறையின் காரணமாக பதில் விகிதம் குறைந்ததால் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக மாதிரியை, எஸ்.ஜே.பி. வாக்காளர்கள் பக்கம் சற்று சாய செய்திருக்கலாம் என்று நாங்கள் கருதுகின்றோம். மே ஆரம்பத்தில் நடத்தப்பட்ட நேர்காணல்கள் இதனை சற்று

ஈடு செய்ததோடு, ஜூன் மாத நேர்காணல்களினால் எங்கள் மாதிரியின் மதிப்பீடுகள் மேலும் திருத்தப்பட வாய்ப்புண்டு", என்று SLOTS கருத்துக்கணிப்பின் இயக்குனர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய கருத்து தெரிவித்தார்.

"என்.பி.பி./ஜே.வி.பி.க்கு இதைவிட அதிக ஆதரவினை காட்டும் சமீபத்தில் நடந்த வேறு சில இணையதள கருத்துக்கணிப்புக்களைப்பற்றி நாங்கள் கேட்கப்பட்டோம். இவை என்.பி.பி./ஜே.வி.பி. ஆதரவினை மிகையாக மதிப்பிடுகின்றன என்பது எங்கள் கருத்து. பதிலளிப்பவர்கள் அனைவரிடமும் அவர்களுக்கு இணையதள அணுகல் உள்ளதா மற்றும் இணையதள ஆய்வில் பங்குபெற விரும்புகிறார்களா என்னும் தரவுகளை SLOTS வழமையாக சேகரிக்கின்றது. இந்த தரவுகள் என்.பி.பி./ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்கு இணையதள அணுகல் இருக்கும் வாய்ப்பு மிக அதிகம் என்பதையும் அவர்கள் இணையதள ஆய்வில் பங்குபற்ற தயாராக இருப்பது அதைவிட அதிகம் என்பதையும் காட்டுகின்றன. மேலும், முந்தைய வாக்களிப்பு நடத்தைக்கு கட்டுப்படுத்திய பின்பும் இந்த வேறுபாடு உள்ளது. எங்கள் தரவுகள், இணையதள கருத்துக்கணிப்புகள் என்.பி.பி./ஜே.வி.பி. ஆதரவினை 10% வரை மிகையாக மதிப்பிடலாம் என காட்டுவதால் இணையதள ஆய்வு செய்வதற்கு இது தகுந்த நேரம் அல்ல என்று நாங்கள் முன்னர் முடிவு செய்திருந்தோம்.", என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்களின் பல்வேறு வகையான குணாதிசயங்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் – இங்கு, "இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?" என்னும் கருத்துக்கும் – இடையேயான தொடர்பை பல அடுக்கு(multilevel model) புள்ளியியல் மாதிரியின் மூலம் முதலில் மதிப்பிடுகிறது. அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்ப அளவீடு செய்யப்பட்ட ஒரு பாரிய தரவு கோப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி பல அடுக்கு மாதிரி(multilevel model) கூறுவதை வைத்து('post-stratification'), அக். 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது. மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும், பிழை விளிம்புகளைப் பெறவும் பல அடுக்கு மாதிரி(multilevel model) 100 முறை மதிப்பிடப்பட்டது.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, April 2023, "IHP Presidential Election Voting Intentions Update March 2023: AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in Presidential Election voter preferences". *Available at:*
https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202309.pdf

Institute for Health Policy, January 2024, “AK Dissanayake leads in Presidential Election voting preferences on 50%, with Sajith Premadasa on 33% of all adults in December. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update December 2023”.
*Available at:* https://ihp.lk/press-releases/ak-dissanayake-leads-presidential-election-voting-preferences-50-sajith-premadasa-33

Institute for Health Policy, February 2024, “AK Dissanayake (50%) maintains lead in Presidential Election voting preferences in January 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update January 2024”.
*Available at: https://ihp.lk/press-releases/ak-dissanayake-50-maintains-lead-presidential-election-voting-preferences-january*

Institute for Health Policy, March 2024, “AK Dissanayake (53%) continues to lead Sajith Premadasa (34%) in Presidential Election voting intent in February 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update February 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/ak-dissanayake-53-continues-lead-sajith-premadasa-34-presidential-election-voting

Institute for Health Policy, April 2024, “Sajith Premadasa (41%) closes gap with AK Dissanayake (44%) in Presidential Election voting intent in March 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update March 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-41-closes-gap-ak-dissanayake-44-presidential-election-voting-intent

### IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

### முறைமை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்ற்றாடிபிகேஷன் (Multilevel Regression and Post-Stratification) (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஏப்ரல் 2024க்கான MRP மதிப்பீடுகள் ஏப்ரல் 2024 ல் நடத்தப்பட்ட 444 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- மே 19 2024 வரை நடத்தப்பட்ட 17,134 ஒட்டுமொத்த நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது. அ.கு.திஸாநாயக மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு பிழை விளிம்பு 3.0–3.3% எனவும், மேலும் ரணில் விக்ரமசிங்க மற்றும் மற்ற உத்தேச வேட்பாளர்களுக்கு 1.0–1.7% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.


## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.